1994 ஏப்ரல் 27]

பணியை பொதுப் பணித் துறையைச் சேர்ந்தவர்கள் மிகவும் சிரமமான முறையிலே செய்து, சமப்படுத்தியிருக்கிறார்கள். 133 அடி உயரத்தில் அந்தச் சிலை அமைக்கும் பணி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுவரைக்கும் 2 கோடியே 31 இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு தடங்கல் இப்போது அந்தப் பணியிலே ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசின் கலங்கரை விளக்கம் மற்றும் சிறு கலங்கள் துறையின் இயக்குநர் 10.3.94 நாளிட்ட கடிதத்தில், அந்தத் திட்டப் பணியை நிறுத்தி வைக்குமாறு கடிதம் எழுதியுள்ளார். நம்மைப் பொறுத்தவரையிலும் ஏறத்தாழ 2 கோடியே 31 இலட்சம் செலவு செய்துவிட்டோம். ஆகவே அதற்கு அனுமதி தர வேண்டுமென்று நம்முடைய தலைமைச் செயலாளர் மத்திய தரைவழிப் போக்குவரத்துச் செயலருக்கு 25-3-94 நாளிட்ட கடிதத்தில் எழுதியுள்ளார். மத்திய அரசிடமிருந்து இன்னும் பதில் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே சிலை அமைக்கும் பணியிலே மத்திய அரசினுடைய கடிதம் தடையாக உள்ளது. அந்தத் தடை நீக்கப்படுமானால் நிச்சயம் நீங்கள் விரும்பும் தேதியில் அந்தச் சிலை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் சிலை அமைவதற்கு மத்திய அரசு இப்போது தடைக்கல்லாக இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் தடையை விரைவிலே நீங்கள் நீக்கித் தர வேண்டும். அந்தச் சிலை அமையும்போது 1330 அரும் குறள்களையும் அந்தப் பீடத்தில் பொறிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கடிதம் எழுதி இருக்கிறோம். இன்னும் அந்தக் கடிதத்திற்குப் பதில் வரவில்லை. 1330 குறளும் அந்தப் பீடத்திலே அமைக்கப்படுமா என்று கேட்டார். 133 அடி உயரத்தில் அமைய இருக்கிற அந்தப் பீடத்தில் 266 குறட்பாக்களைப் பொறிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 414, திரு. இராம. இராமநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[1994 ஏப்ரல் 27

414—

கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரிக்கு கணித மேதை இராமானுஜம் பெயர் வைத்தல்.

**21944*—திரு. இராம. இராமநாதன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரிக்கு கணித மேதை இராமானுஜம் அவர்களின் பெயர் வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு.இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சவுத் இந்தியன் கேம்ப்ரிட்ஜ் என்ற அளவில், மிகச் சிறப்பான பெயர் வாய்ந்திருக்கிற கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரியிலே கணித மேதை இராமானுஜம் அவர்கள் பயின்றார்கள். கும்பகோணம் டவுன் ஹையர் செகண்டரி பள்ளியிலே எஸ்.எஸ்.எல்.சி. முடிய படித்துவிட்டு, இன்டர்மீடியட் கோர்சை கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரியிலே அவர்கள் பயின்றார்கள். அதைப்போல ரைட் ஆனரபிள் ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரியில் ஆசிரியராகக்கூட பணி புரிந்திருக்கிறார்கள். அப்படிச் சிறப்பு வாய்ந்திருக்கிற கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரிக்கு கணித மேதை இராமானுஜம் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கை. தமிழகத்தினுடைய ஒப்புயர்வற்ற முதல்வரவர்கள் இப்படி சிறப்பு வாய்ந்தவர்களுக்கெல்லாம், தகுதி வாய்ந்தவர்களுக்கெல்லாம் சிறப்புச் சேர்த்துக் கொண்டிருக்கிற இந்தப் புனித நல்லாட்சியில் என்னுடைய தொகுதியிலே அமைந்திருக்கிற கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரிக்கு

1994 ஏப்ரல் 27]

கணித மேதை இராமானுஜம் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக கோரிக்கையினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே வைத்து, அதனைத் தயவு செய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து, நிறைவேற்றித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமையான கல்லூரிகளின் பெயர்களை அவ்வப்போது மாற்றுவது சரியாக இருக்காது என்று அரசு கருதுகிறது. புதிய கல்லூரிகள் தொடங்கும்போது வேண்டுமானால் வேண்டிய பெயர்களைச் சூட்டிக்கொள்ளலாம் என்றும் அரசு முடிவெடுத்திருக்கிறது. எனவே பெயர் மாற்றம் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். பழமையான கல்லூரிகளில் தமிழ்நாட்டில் பல்வேறு தலைவர்கள் பயின்று, பணி புரிந்து வெளியேறி இருப்பார்கள். எனவே இப்படி ஒவ்வொன்றாக பெயர் வைத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலை வருமானால் அது ஒரு குழப்பத்தை மக்களிடையே ஏற்படுத்தும் என்று அரசு கருதுகிறது. ஆகவே இதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரிக்கு கணித மேதை இராமானுஜம் அவர்களுடைய பெயரை வைப்பதிலே எந்தவிதமான சிரமமும் இராது என்பதையும், அதிலே குழப்பம் இராது என்பதையும் அங்கே இருக்கின்ற மக்கள் அனைவரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட நாட்களாக, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், பல ஆட்சிகள் இருந்தபோது இந்தக் கோரிக்கையை வைத்திருந்தாலும்கூட, அதை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. ஆனால் தமிழகத்தினுடைய ஒப்புயர்வற்ற முதல்வராக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் இப்படி சிறப்புச் செய்திருக்கிறவர்களுக்கு மேன்மேலும் சிறப்புக்களை ஏற்படுத்தி வருகிற நிலையில், இன்றைக்கு தமிழகம் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டம் மட்டுமல்ல, அகில உலகமே பாராட்டிக் கொண்டிருக்கிற அந்தக் கணித மேதை இராமானுஜம் அவர்களின் பெயரை அந்தக் கல்லூரிக்கு வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் குழப்பத்தை ஏற்படுத்தவில்லை என்பதோடு, அவருக்குச் சிறப்புச் செய்வதோடு, அப்படிப்பட்ட சிறப்புகளைச் செய்திருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை அனைவரும் போற்றுவார்கள் என்ற அடிப்படையை மாண்புமிகு அமைச்சரவர்கள் கருத்திலே கொண்டு...

[1994 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்போதுமே கேள்வியாகக் கேட்கமாட்டேன் என்கிறீர்களே.

திரு. இராம. இராமநாதன் : தயவு செய்து மீண்டும் இதைப் பரிசீலனை செய்து, கணிதமேதை இராமானுஜம் அவர்கள் பயின்றிருக்கக்கூடிய கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரிக்கு அவருடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்ற மக்கள் கோரிக்கையை இங்கே வைத்து, அதை நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பான தலைவர்களது பெயர்களுக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பதில் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எப்போதுமே அக்கறையோடு இருக்கிறார்கள். கும்பகோணத்தில் குழப்பம் வரும் என்பதல்ல. தமிழகம் முழுவதும் இந்தக் குழப்பம் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையிலே சொல்லியிருக்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினரும் இந்தக் குழப்பத்திற்கு ஆட்பட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான வாய்ப்புகள் தற்போது இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 415, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

415—

திருவையாறு அரசர் கல்லூரிக்கு விளையாட்டுத் திடல் அமைத்தல்.

**23111—திரு. ப. கலியபெருமாள்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு வட்டத்திலுள்ள அரசர் கல்லூரியில் மாணவர்களுக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.